" கண்ணைக் காப்பது இமை "
" மண்ணைக் காப்பது மழை "

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2012-ம் ஆண்டு ஜீலை திங்கள் 27-ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும் மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின் மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

*-*-*-*-*-*

**திருக்குறள் : " அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆர்இருள் உய்த்து விடும் "**

**பொருள் : அடக்கமாகிய நற்பண்பு, ஒருவனை உயர்த்தித் தேவருலகில் சேர்க்கும். அடங்காமையாகிய தீப்பண்பு ஒருவனைத் தாங்குவதற்கு அரிய இருளலகில் சேர்த்து விடும்.**

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால் இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும். உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(அரசாணை (நிலை) எண்.245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

**1) ம.பொ.3/ம.எண் .130/2012-2013**

மதுரை மாநகராட்சி வார்டு 94–ல் அவனியாபுரம் வெள்ளைக்கல் குப்பை சேகரிப்பு மையம் உள்ளது. இக்குப்பை சேகரிப்பு மையத்தில் தென்பகுதியில் சுற்றுச்சுவர் இல்லாததினால் ஆக்கிரமிப்புகள் மற்றும் சமூக விரோதிகள் உள்ளே வந்து செல்லும் நிலை உள்ளது. இதனை தவிர்க்கும் பொருட்டு வெள்ளைக்கல் குப்பை சேகரிப்பு மையம் தென்பகுதியில் சுற்றுச்சுவர் கட்டி பாதுகாப்பு செய்ய மதிப்பீடு **ரூ.95.00** இலட்சம் தயார் செய்யப்பட்டு மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.212**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**2) <u>ம.நி.1/42939/2007</u>**

மதுரை மாநகராட்சி தெருவிளக்குப்பிரிவில் அயற்பணியின் கீழ் உதவி மின்பொறியாளர்களாக பணிபுரியும் நான்கு நபர்களுக்கு அயற்பணி காலம் ஒரு வருடத்திற்கு நீட்டிப்பு செய்து தமிழ்நாடு உற்பத்தி மற்றும் விநியோக நிறுவனம் (Tamil Nadu Generation and Distribution Corporation Ltd.) TANGEDCO அரசு நிறுவனத்திடமிருந்து உத்தரவு வரப்பெற்றுள்ளது.

| **வ. எண்.** | **அயற்பணியில் பணிபுரியும் உதவிப் பொறியாளர்கள் (மின்னியல்)** | **அயற்பணி நீடிப்புக் காலம்** |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.ராமச்சந்திரன் | 04.11.2011 முதல் 03.11.2012 முடிய |
| 2 | திரு.வி.முத்துகிருஷ்ணன் | 18.11.2011 முதல் 17.11.2012 முடிய |
| 3 | திரு.கே.ஜி.சாந்தாராம் | 07.12.2011 முதல் 06.12.2012 முடிய |
| 4 | திரு.ஆர்.குமார் | 11.12.2011 முதல் 10.12.2012 முடிய |

மேற்கண்ட நான்கு நபர்களுக்கும் மேற்கண்டவாறு நீட்டிப்பு செய்து வரப்பெற்றுள்ள தமிழ்நாடு உற்பத்தி மற்றும் விநியோக நிறுவனம் (TamilNadu Generation and Distribution Corporation Ltd.) Administrative Branch (per) FB CMD TANGEDCO Proc.No.19, நாள் :21.11.2011–ஐ மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கப்பட்டதில் மாமன்ற தீர்மானம் எண்.94, நாள் : 23.12.2011-ல் பொருள் ஒத்தி வைக்கப்பட்டது என தீர்மானம் நிறைவேற்றபட்டது. எனவே மேற்படி அரசு ஆணையை பதிவு செய்ய மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.213</u>**

**<u>பதிவு செய்யப்பட்டது</u>**

**3) <u>ம.பொ.4/ம.எண் 304/12-13</u>**

மதுரை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள நகராட்சி, பேரூராட்சி மற்றும் கிராம ஊராட்சிகளையும் சேர்த்து தற்போது மொத்தம் 100 வார்டுகள் 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு பொதுமக்களின் அத்தியாவசியப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்படி 4 மண்டலங்களில் மண்டலம் 2 மற்றும் மண்டலம் 3–க்கான அலுவலகப் பணிகளை மேற்கொள்ள ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மண்டல அலுவலகங்களில் போதிய இட வசதி இல்லாத காரணத்தினால் மேற்படி இரண்டு மண்டலங்களுக்கும் தனியாக மண்டல அலவலகங்கள் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேற்படி பணிகளை மேற்கொள்ள பகுதி II திட்டம் 2012-13-ம் ஆண்டு திட்ட நிதியின் கீழ் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. (ந.க.எண்.48283/P1/2011-1, நாள் :18.06.12)

**<u>பணிகளின் விபரம் பின்வருமாறு :</u>**

| **வ. எண்** | **பணியின் விபரம்** | **மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்)** | **அரசு மானியமாக வழங்கிய தொகை (ரூ.இலட்சத்தில்)** | **மாநகராட்சியின் பங்களிப்பு தொகை (ரூ.இலட்சத்தில்)** |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **1** | **மண்டலம் 2:** வார்டு எண்.43, ரேஸ்கோர்ஸ் சாலையில் மண்டல அலுவலக கட்டிடம் கட்டுதல் | **325.00** | **105.00** | **220.00** |
| **2** | **மண்டலம் 3:** வார்டு எண்.71, புதுராமநாதபுரம் சாலை OHT வளாகத்தில் மண்டல அலுவலக கட்டிடம் கட்டுதல் | | | |

மேற்படி ஒப்புதலின் அடிப்படையில் இரண்டு மண்டல அலுவகங்களின் கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்வதற்கும், அரசு மானியமாக வழங்கிய தொகை ரூ.**105.00** இலட்சம் போக மீதமுள்ள தொகை **ரூ.220.00** இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதி மூலம் ஒதுக்கீடு செய்வதற்கும், மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கவும், ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.214</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**4) <u>ம.பொ.3/ம.எண்:191/12-13</u>**

மதுரை மாநகராட்சி அவனியாபுரம், வெள்ளக்கல்லில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் **125MLD** கொள்ளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு இயங்கிவருகிறது. தற்பொழுது அவனியாபுரம் கழிவுநீர் பண்ணைக்கு ஜெய்ஹிந்துபுரம், கீரைத்துரை, முத்துப்பட்டி, சந்தைப்பேட்டை ஆகிய மெயின் பம்பிங் ஸ்டேசனில் இருந்து சுமார் ஒரு நிமிடத்திற்கு **62654 லிட்டர் (LPM)** கழிவுநீர் வருகிறது. தற்போது கிடைக்கும் கழிவுநீர் **62654 LPM** மற்றும் பாதாள சாக்கடை விடுபட்ட பகுதி முடிவடைந்தவுடன் கிடைக்கும் அளவையும் கருத்தில் கொண்டு, அமைக்கப்படும் collection well க்கு தேவையான மோட்டார்கள் பொருத்த உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. இதன் அடிப்படையில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்ததிற்கு கழிவுநீர் பம்பிங் செய்ய சுமார் **31000 LPM** அளவு கொண்ட மூன்று எண்ணிக்கை Submersible மோட்டார் வாங்கி பொருத்த மதிப்பீடு ரூபாய் **95.00** லட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.215</u>**
**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**5) <u>HF2/18326/12</u>**

மதுரை மாநகராட்சியில் உள்ள நலவாழ்வு மையம் – 16, புட்டுத்தோப்பு மையத்தில் பணிபுரிந்து வரும் திருமதி.G.ஜீலியானா மேரி, நகர சுகாதார செவிலியர் அவரது குடும்ப சூழ்நிலையைக் கருதி சென்னை மாநகராட்சிக்கு ஒருவழிப் பணிமாறுதல் கோரியுள்ளதின் பேரில் அவரை சென்னை மாநகராட்சிக்கு ஒருவழிப் பணிமாறுதல் செய்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :**

1) அவரது சொந்த விருப்பதின் பேரில் மாறுதல் கோருவதால் பயணப்படி வழங்கப்படமாட்டாது.
2) அரசு உத்தரவு பெறப்பட்ட பின்னர் பணிமாறுதல் செய்யப்படும்.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.216</u>**
**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**6) <u>மபொ.1/000478/12</u>**

மதுரை மாநகராட்சி மைய பொறியியல் பிரிவு கட்டுப்பாட்டில் தமிழ்நாடு முன்னாள் இராணுவத்தினர் கழகத்தை சார்ந்த (Texco-Chennai, The Government of Tamilnadu Undertaking) பணியாளர்கள் கீழ் கண்டுள்ளபடி பணிபுரிந்து வருகின்றார்கள்.

| | |
|---|---|
| 1) காவலர்கள் (Security Guard) | – 19 நபர்கள் |
| 2) ஓட்டுநர்கள் (Driver) | – 12 நபர்கள் |
| 3) மெக்கானிக் (Mechanic) | – 13 நபர்கள் |
| 4) தலைமை காவலர்கள் | – 2 நபர்கள் |
| மொத்த பணியாளர்கள் | **– 46 நபர்கள்** |

அரசு ஆணை எண். 511, நாள் : 10.06.2010–ல் Public (Ex–servicemen) Department TEXCO பணியாளர்களுக்கு அகவிலைப்படியின்பேரில் கீழ்க்கண்டவாறு (1.4.2011 to 31.3.2012) ஊதியம் நிர்ணயம் செய்ய வேண்டியுள்ளது.

| வ. எண் | பதவி | தற்போது வழங்கப்படும் ஊதியம் | 01.04.2011 முதல் வழங்க வேண்டிய ஊதியம் |
|---|---|---|---|
| 1. | காவலர் | **7191** | **7690** |
| 2. | மெக்கானிக் | **8405** | **8905** |
| 3. | ஓட்டுநர் | **8405** | **8905** |
| 4. | தலைமைக் காவலர் | **8405** | **8905** |

மேற்கண்ட ஊதியத்திற்கு சேவை கட்டணம் **12%** சேவை வரி **10%** கல்வி வரி **2%** உயர்நிலை பள்ளி கல்வி வரி **1%** வழங்க வேண்டியுள்ளது.

எனவே மேற்படி நிறுவனத்திற்கு மேலே குறிப்பிட்டுள்ள விபரப்படி ஊதியம் மற்றும் நிலுவைத் தொகையினையும் வழங்குவது சம்பந்தமாக மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.217**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 27.07.2012**

# மதுரை மாநகராட்சி
# <u>மாமன்றக் கூட்டம்</u>
# <u>Table Agenda</u>

**<u>1 ) மதி.1/20947/2012</u>**

மதுரை மாநகராட்சி எல்கைக்கு உட்பட்ட மதுரை வடக்கு வட்டம் தல்லாகுளம் கிராமம் புல எண்.54/2, சர்வே வார்டு XVI, பிளாக் எண்.6, நகரளவு எண்.23/2-ல் மொத்தம் 3.70 ஏக்கர் பரப்பில் 13 செண்ட் நிலத்தில் வனத்துறையினர் சமூகக் காடுகள் வளர்க்கும் திட்டத்தின் கீழ் மரக்கன்றுகளை வளர்த்து கொள்ளும் காரணத்திற்காக நிலமாற்றம் செய்து மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண்:53354/10, நாள் : 24.09.2010–ல் முன்நுழைவு செய்திட அனுமதி வழங்கியுள்ளார். இதுதொடர்பாக வட்டாட்சியர் மதுரை வடக்கு அவர்களிடமிருந்து, மாமன்ற தீர்மானம் நிறைவேற்றக் கோரி முன்மொழிவுகள் வரப்பெற்றுள்ளது. இப்புலத்தின் மொத்தப்பரப்பு 3.70 ஏக்கர் ஆகும். மேற்கண்ட இடம் சர்வே வார்டு XVI, பிளாக் எண்.6-ல், T.S.No.23/2 அரசு புறம்புகல் 3.7 ஏக்கர் என்று கணக்குகளில் தாக்காகி உள்ளது. எனவே, 3.7 ஏக்கர் இடத்தில் 13 செண்ட் இடம் மட்டும் வனத்துறைக்கு சமூகக்காடுகள் வளர்க்கும் திட்டத்தின்கீழ் மரக்கன்றுகள் நடுவதற்கு நிலம் மாற்றம் செய்வதை மாநகராட்சிக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்ற விபரத்தை தெரிவிக்கும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.218</u>**
**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**<u>2 ) ம.பொ.4/ 020823/ 12</u>**

மதுரை மாநகராட்சி திருப்பரங்குன்றம், திருநகர், ஹார்விப்பட்டி, பசுமலை, வெள்ளைக்கல் மற்றும் வார்டு 55,56,58 ஆகிய பகுதிகளுக்கு மூலக்கரை பம்பிங் ஸ்டேசன் (Booster), தச்சம்பத்து பம்பிங் ஸ்டேசன், சித்தையாபுரம் பம்பிங் ஸ்டேசன் மற்றும் கீழடி பம்பிங் ஸ்டேசன் ஆகிய இடங்களிலிருந்து பம்பிங் செய்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த பம்பிங் ஸ்டேசனில் ஜெனரேட்டர் வசதி இல்லாமல் உள்ளது. தற்போது அடிக்கடி மின் தடை ஏற்படுவதால் மின்தடை ஏற்படும் நேரங்கள் பம்பிங் செய்ய முடிய வில்லை, இதனால் குடிநீர் விநியோகம் தடை ஏற்பட்டு மேற்கண்ட பகுதி பொதுமக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன்கருதி கீழ்க்கண்டவாறு ஜெனரேட்டர் வசதி செய்வது அவசியமாகிறது.

| வ. எண் | கோப்புகள் | ஜெனரேட்டர் அமைக்க வேண்டிய இடம் | மதிப்பீடு தொகை |
|---|---|---|---|
| 1 | Ma.Po.4 / 020823/12 | தச்சம்பத்து குடிநீரேற்று நிலையம் (125KVAGenarator) | Rs. 14, 40,000/- |
| 2 | Ma.Po.4 / 020817/12 | மூலக்கரை குடிநீரேற்று நிலைய Booster (125 KVA Genarator) | Rs.14,40, 000/- |
| 3 | Ma.Po.4 / 020819/12 | சித்தையாபுரம் குடிநீரேற்று நிலையம் (180KVAGenarator) | Rs.17,70,000/- |
| 4 | Ma.Po.4 / Est. 364 /12 | வெள்ளைக்கல் பம்பிங் ஸ்டேசன் (15KVAGenarator) | Rs.5,15,000/- |
| 5 | Ma.Po.4 / 020926/12 | கீழடி பம்பிங் ஸ்டேசன் (180KVAGenarator) | Rs.17,70,000/- |

திருப்பரக்குன்றம், திருநகர், ஹார்விப்பட்டி, பசுமலை, வெள்ளைக்கல் மற்றும் வார்டு 55, 56, 58 ஆகிய பகுதிகளில் குடிநீர் விநியோகம் சீராக கிடைத்திட மேற்கண்ட இடங்களில் புதிதாக ஜெனரேட்டர் வசதி செய்வதற்கு மாமன்ற ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.219</u>**
**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**<u>3) CW3 /1100/2012</u>**

மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை வணக்கத்திற்குரிய மேயர் அலுவலக பாதுகாப்பு பணிக்கு திரு.யூ.வி.மீனாட்சி சுந்தரம் டெக்ஸ்கோ பணியாளர் வணக்கத்திற்குரிய மேயரின் அலுவலக பாதுகாவலராக பணியாற்றி வருவதால் ஏற்கனவே வழங்கி வரும் சேவைக் கட்டணம் அடிப்படையில் பழைய விகிதத்திலேயே (Old Rates) தொடர்ந்து சென்னை டெக்ஸ்கோ நிறுவனத்திற்கு காசோலைகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் அரசாணை எண்:456 பொது (முன்னாள் இராணுவத்தினர்) துறை நாள் : 17.05.2012 முதல் 10% உயர்த்தி ஊதியம் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அரசாணை பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது)

எனவே மேற்படி நிறுவனத்திற்கு மேற்படி அரசாணையின்படி, ஆணையாளர் அவர்களின் உத்தரவின்படி 01.06.2012 முதல் புதிய விகிதத்திலேயே தொடர்ந்து வழங்கவும் மற்றும் நிலுவைத் தொகை வழங்கவும், அதற்கான செலவினத்தை மதுரை மாநகராட்சி ஏற்றுக்கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>குறிப்பு</u> :

01.06.2012 முதல் 30.09.2012 வரை சேவைக் கட்டணம் மாதம் ஒன்றிற்கு ரூ.**10,241**/- மற்றும் வரிகள் உட்பட ரூ.**12,888/-** வீதம் நான்கு மாதத்திற்கு ரூ.51,552/- செலவு ஆகும்.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.220</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**<u>4) ம.தி.1/020766/2012</u>**

மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு 76, (பழைய புல எண்.242/1B மாடக்குளம் கிராமம்), சர்வே வார்டு XXII பிளாக் எண்.30, சர்வே எண்.54 துரைச்சாமி நகரில் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு எண்.ம.வ./ம(ம.ம.)119/86-ல் பூங்காவிற்கு ஒதுக்கிடு செய்யப்பட்ட இடத்தில் சுமார் 72ச.மீ இடத்தை இப்பகுதி மக்களின் பயன்பாட்டிற்கான நூலகத்திற்கு ஒதுக்கீடு செய்யுமாறு துரைச்சாமி நகர் குடியிருப்போர் நலச்சங்கத்தினர் கோரியுள்ளனர்.

இம்மனையில் ம.வ./ம.(ம.ம.) எண்.119/86-ல் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் மனைப்பிரிவு ஒப்புதல் செய்யப்பட்டுள்ளது. ஒப்புதல் அளிக்கப்பட்டட மனைப்பிரிவில் 1150ச.மீ இடம் பூங்காவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இடத்தில் அமைக்கப்பட்டு மாநகராட்சி பராமரிப்பில் உள்ளது. பூங்கா இடத்தில் 6 மீ x 12 மீ அளவில் சுமார் 72 ச.மீ பரப்பளவு இடத்தை பூங்கா உபயோகத்திலிருந்து நூலக உபயோகத்திற்கு மாற்றம் செய்ய நகர் ஊரமைப்பு இயக்குநர் ஒப்புதல் பெற வேண்டும். எனவே பூங்கா உபயோகத்திலிருந்து நூலக உபயோகத்திற்கு நில உபயோக மாற்றம் செய்ய நகர் ஊரமைப்பு இயக்குனரின் அனுமதி பெற்று நூலகத்திற்கு ஒதுக்கீடு செய்ய மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.221</u>**

**<u>220 ச.மீ. ($5^{1/2}$ சென்ட்) இடத்தை நில உபயோக மாற்றம் செய்ய நகர் ஊரமைப்பு இயக்குனரின் அனுமதி பெற்று நூலகத்திற்கு ஒதுக்கீடு செய்ய குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

**<u>5) B30 / 19482 / 2008</u>**

மதுரை மாநகராட்சி மண்டலம் 1 (மேற்கு மண்டலம்) தெருவிளக்குகளுக்கு மின் சேமிப்பு திட்டத்தை ESCO முறையில் நடைமுறைபடுத்த மாமன்ற தீர்மானம் எண்.119 நாள் 30.01.2012-தீர்மானத்தின்படி கடந்த 27.06.2012–ல் Online டெண்டர் வரவழைக்கப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனங்கள் கலந்து கொண்டனர்.

1. M/s R& K Electricals Coimbatore
2. M/s Pneumatic Controls Coimbatore
3. M/s Schnell Energy Equipment (p) ltd Coimbatore

மேற்கண்ட நிறுவனங்களின் தொழில்நுட்ப (Technical bid)-ஐ மதிப்பாய்வு குழுவில் 27-06-2012ல் தேதி ஆய்வு செய்ததில்

1. M/s R& K Electricals Coimbatore
2. M/s Pneumatic controls ஆகிய இரண்டு நிறுவனங்கள் தொழில் நுட்ப ரீதியாக பூர்த்தியாகவில்லை. (Technical bid not Satisfied), மற்றொரு நிறுவனமான M/s Schnell Energy Equipment (p) Ltd மட்டும் தொழில் நுட்ப ரீதியாக (Technical bid)–ல் Satisfy ஆவதால் மதிப்பாய்வு குழுவில் ஏற்கப்பட்டு, அதன்படி M/s Schnell Energy Equipment நிறுவனத்தாரின் விலைப்புள்ளி

(Price Bid)-ஐ 11.07.2012 நாளன்று Online Tender மூலம் Download செய்ததில் மேற்படி நிறுவனத்தார் மின் இணைப்புகளில் சேமிக்கப்படும் மின்சேமிப்பில் 95% சதவீதம் அந்நிறுவனத்தாருக்கும், 5% சதவீதம் மாநகராட்சிக்கும் என்ற பங்கீடு அடிப்படையில் செய்து தருவதற்கு டெண்டரில் குறிப்பிட்டிருந்ததை மதிப்பாய்வு குழு ஆய்வுசெய்து இந்த நிறுவனத்தாரின் விலைபுள்ளியை ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்த மின்சேமிப்பு திட்டத்திற்கான மின்சேமிப்பு கருவிகளை மேற்கண்ட நிறுவனமே சொந்த செலவில் அமைத்து ஆறு ஆண்டுகள் பராமரித்து, ஆறு ஆண்டுகள் முடிந்த பின்னர், மின்சேமிப்பு சார்ந்த அனைத்து கருவிகளையும், மாநகராட்சி வசம் மேற்கண்ட நிறுவனத்தாரால் நல்லநிலையில் ஒப்படைக்கபடவேண்டும்.

ஆறு ஆண்டுகளுக்கு பிறகு மின்சேமிப்பு கருவிகளினால் சேமிக்கப்படும் மின்சேமிப்பு முழுவதும் மாநகராட்சிக்கு பயனுடையதாக இருக்கும் என்பதால் M/s Schnell Energy Equipment (p) Ltd நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.222</u>**
**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 27.07.2012**

## தீர்மானம் –1

1. தென் தமிழகத்தின் நீர் ஆதாரமான முல்லைபெரியார் அணையினை தமிழக அரசு மூலம் பராமரிப்பு மற்றும் துாய்மை பணியினை மேற்கொள்ள, உச்சநீதிமன்றத்தில் தகுந்த ஆதாரங்களுடன் மேல் முறையீடு செய்து உத்தரவு பெற்றுத்தந்த மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு மதுரை மாநகராட்சி பணிவுடன் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.

**மாமன்றத்தீர்மானம் எண்.223**

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 27.07.2012**

## தீர்மானம் –2

2. தமிழக மக்களின் நலன் கருதி அல்லும் பகலும் அயராது பாடுபட்டுவரும் மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஆணைப்படி தமிழகத்தை வளம்மிகு மாநிலமாக மாற்றுவதற்கு சிறந்த மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு முதலமைச்சர் விருது ஆண்டுதோறும் சுதந்திர தினத்தன்று வழங்கப்படும் என்றும், சிறந்த மாநகராட்சிக்கு ரூ.25 இலட்சமும் பாராட்டு பத்திரமும் வழங்கப்படும் என்றும் சிறப்பான திட்டத்தை அறிவித்துள்ளார். மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்கள் அறிவித்துள்ள இத்திட்டத்தின் மூலம் மதுரை மாநகராட்சியின் பணித்திறன் உயர்வடையும் என்ற நம்பிக்கையோடு மாமன்றம் சார்பாக கோடான கோடி நன்றியை இம்மாமன்றம் தெரிவித்துக்கொள்கிறது.

**மாமன்றத்தீர்மானம் எண்.223**

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 27.07.2012**